விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 352 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 20 செவ்வாய்க்கிழமை (06.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

எதிர்வரும் 12ஆம் திகதி முதல்

## யாழிலிருந்து மீண்டும் விமான சேவைகள்

சபையில் விமான சேவைகள் அமைச்சர்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் (பலாலி) சர்வ தேச விமான நிலையத்தில் விமான 11

## தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில்

13ஆம் திகதி சர்வகட்சிக் கூட்டம்

(கொழும்பு)
தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்துவதற்கு ஜனாதிபதி 11

## யாழ் - கொழும்பு சொகுசு பஸ் கிளிநொச்சியில் தடம்புரண்டது

22 பேர் காயம்



(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் சொகுசு பேருந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசு பேருந்தே இவ்வாறு இரணைமடுச் சந்திக்கு அருகில் விபத்துக்குள்ளானது.
விபத்தின்போது பேருந்தில் பயணித்த 22 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் 11

கைப்பற்றப்படும் ஹெரோயின்கள்

# மீண்டும் சந்தைக்கு மக்களிடமே வருகின்றது

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றில் அதிர்ச்சித் தகவல்



*(கொழும்பு)* சோதனைகளின்போது கைப்பற்றப்படும் ஹெரோயின் போதைப்பொருட்கள் மீண்டும் சந்தைக்கு மக்களிடமே வருகின்றது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றில் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார். *(04ஆம் பக்கம் பார்க்க)*

10 ரூபாயினால்

## டீசல் விலை குறைக்கப்பட்டது

(கொழும்பு)
டீசல் விலை குறைக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி நிறுவனங்கள் அறிவித்துள் 11

250 ரூபாயினால்

## லிட்ரோ எரிவாயு விலை அதிகரிப்பு

(கொழும்பு)
விலைச் சூத்திரத்தின் பிரகாரம் லிட்ரோ சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. 11

## ஈஸ்டர் தாக்குதல் பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் ஏற்க முடியாது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி



(கொழும்பு)
2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்காமைக்கான பொறுப்பை தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்துள் 11

## ஓர் அலகு மின்சாரத்துக்கு ரூ.56.90 செலவிட வேண்டும்

மானியம் வழங்கவும் யோசனை
அமைச்சர் காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)
அடுத்த வருடம் நாட்டில் தடை இல்லாமல் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமானால், ஓர் அலகு மின்சாரத்திற்கு 56.90 ரூபாய் செலவிட வேண்டும் என இலங்கை மின்சார சபை மதிப் 11

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில்

## ஜனாதிபதி, அமைச்சரவையுடன் கலந்துரையாட நடவடிக்கை

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)
மின் கட்டணத்தை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில் அது தொடர்பில் ஜனாதிபதியுடனும் அமைச்சரவையிலும் கலந்துரையாடுவேன்.
அத்துடன் விட 12

## அரசியலில் தொடர்ந்து இருப்பேன் தேர்தலுக்கு இதுவே சரியான தருணம்

பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

- ரணிலை ஜனாதிபதியாக தெரிவு செய்தமை சிறந்த முடிவு.
- கட்சிக்குள் பிளவுகள் இல்லை



11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி வேலுப்பிள்ளை பரஞ்சோதி
## (சோதி அம்மா)



பிறப்பு 15.02.1929 இறப்பு 05.12.2022

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பரஞ்சோதி அவர்கள் நேற்று (05.12.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை வேலுப் பிள்ளை (T.V.மாஸ்ரர்) ஓய்வுபெற்ற அதிபர், பிரசித்த நொத்தாரிசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி, விக்னேஸ்வரி, சகுந்தலேஸ்வரி, விக்னராஜா (Switzerland) குமரேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆறுமுகம் கந்தசாமி, துரை எங்கரசு, நந்தினி, ரஞ்ஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிர்த்திவாசன், சுபநேமி, அரணியா, அனந்தசயனன், அனந்தகயன், மயூசிதா, மாதேஷ், அனிஷா பாணு, கேசவ் ஆகியோரின் அன்புப் பாட்டியும் கிறிசிவ், ஆதிரன், ஆக்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
அரசகேசரிப்பிள்ளையார்
கோவிலடி, நீர்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்

(13683)

# வயோதிப கைதிகள் விடுவிக்கப்படுவர்

## நீதியமைச்சர் விஜயதாச

கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட கைதிகள், வயதான கைதிகள் மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கான பொறிமுறையொன்று ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் அறிமுகப்படுத்தப்படும் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து கைதிகளையும் கணக்கிடுவதற்காக ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வாரம் மேலும் ஐந்து குழுக்கள் நியமிக்கப்படும் எனவும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மூன்று விசேட வைத்தியர்களை உள்ளடக்கிய மற்றுமொரு குழு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக நியமிக்கப்படும் எனவும், விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளை சிபாரிசு செய்வதற்கு இந்தக் குழுவிற்கு அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


**அன்பொளி கல்வியகத்தின்**
**(பிரபல புலமை ஆசான் ப.பத்மநேசன்)**
**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2023**
**இற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

அனுமதிகளை இன்று 06.12.2022 செவ்வாய்க்கிழமையிலிருந்து 10.12.2022 சனிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு :- வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.
"சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்"
இயக்குநர்
(13690)


# இருபத்தைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

06.12.2022 அமரர்



## திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி

திதி– பரணி கார்த்திகை

*பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்*
*அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்*
*உற்றார் உறவினர்களுக்கு இனியவளாய்*
*வாழ்ந்து நம்மைவிட்டுப் பிரிந்து*
*இருபத்தைந்து ஆண்டுகள் சென்றாலும்*
*எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கும்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*சீரணி அம்மனைப் பிரார்த்திக்கிறோம்*

சண்டிலிப்பாய், மேற்கு
சண்டிலிப்பாய்

குடும்பத்தினர்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

(13684)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் செல்வராசா பாக்கியம்



பிறப்பு 05.05.1934

இறப்பு 06.11.2022

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 06.12.2022 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

பாடசாலையடி,
இராசவீதி, நீர்வேலி.

077 704 0215
077 609 3760

(13667)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய தமிழ் எம்.பிக்கள் முன்வர வேண்டும்

## ஆறு.திருமுருகன் அவசர கோரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மருத்துமனைகளில் தட்டுப்பாடாகவுள்ள மருந்துகளை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சிறப்புரிமைகளை பயன்படுத்தி, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாக பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.**

யாழில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மருத்துவமனை தரப்பினர் இது தொடர்பில் அறிவித்திருக்கின்றனர். அதேவேளை நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எங்களுடைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்களில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களினூடாகவோ இந்த புற்றுநோய் மருத்துவமனைக்கு செல்லும் மக்களின் அவல நிலையை இன்னும் போக்கியதாக தெரியவில்லை.

எங்களை பொறுத்தவரையில் பல்வேறு சமய நிறுவனங்களினூடாக குறித்த மருத்துவமனைக்கு இலட்சக்கணக்கான ரூபா செலவில் மருந்துப்பொருட்களை வழங்கி வருகின்றோம்.

எனவே தயவு செய்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் தரப்பினர் நேரடியாக குறித்த இடங்களுக்கு சென்று அங்குள்ள விடயங்களை ஆராய்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

எனவே உடனடியாக எமது மக்கள் பிரதிநிதிகள் யாழிலுள்ள மருத்துவமனைகளுக்கு சென்று அத்தியாவசியமான மருந்து விபரங்களை எடுத்து தங்களது சிறப்புரிமைகளை பயன் படுத்தி இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதரங்களின் ஊடாக உடனடியாக மருந்து உதவியை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-33)

# தேர்தலை பிற்போட்டால் நீதிமன்றை நாடுவோம்

## விஜித ஹேரத் எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தோல்வியை தாமதப்படுத்தி கொள்வதற்காகவே அரசாங்கம் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது என்றும் தேர்தல் பிற்போடப்பட்டால் அதன் விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்ட போது தேர்தல்கள் ஆணைக்குழு இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் உள்ளூராட்சி தேர்தலுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளமையானது வேடிக்கையானது என்றும் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தோல்வியை பிற்போடுவதற்காக அரசாங்கம் தேர்தலை பிற்போட்டால் வாக்குரிமைக்காக நீதி மன்றத்தை நாடவும் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மட்டக்களப்பில் சிவபூமி திருமந்திர அரண்மனைக்கு அடிக்கல் நாட்டு



(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் கோண்டாவிலைத் தலைமையகமாகக் கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் பல்வேறுபட்ட அளப்பரிய சமய, சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் சிவபூமி அறக்கட்டளையினரால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் அமையவுள்ள திருமந்திர அரண்மனைக்கு (முகலிங்கக் கோவில்) அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (நி)

## நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்ற 20 பேர் திருகோணமலையில் கைது

(கொழும்பு)

திருகோணமலை கடற்பரப்பில் உள்ளூர் மீன்பிடி இழுவை படகில் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயன்ற 20 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடற்பரப்பில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த குழுவினர் கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் உட்பட களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, மூதூர், மற்றும் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோத குடியேற்ற முயற்சிகளைத் தடுப்பதற்காக, கரையோரப் பகுதிகளில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (நி)

## களனியில் தீ விபத்து



(கொழும்பு)

களனி, வாரகொடையில் உள்ள தொழிற்சாலையின் களஞ்சிய சாலையில் நேற்று திங்கட்கிழமை காலை பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

களஞ்சியசாலையின் மேல் மாடியில் குறித்த தீ பரவியது. ஆறு தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


Service Appreciation

Mrs. Kalaranjitham Ujantha Premalal (BE.d)

T/Kappalthurai G.T.M.S
07.03.1990-21.03.1990
T/Selvanayagapuram G.T.M.S
22.03.1990-28.07.1992
T/Konalinga Vidyalayam
29.07.1992-26.04.1999
T/Sithur G.M.M.S
27.04.1999-04.08.1999
T/Namagal G.T.M.S
05.08.1999-21.05.2009
T/Rawaneswaraa Vidyalayam
22.05.2009-15.03.2016
T/Abeyapura Vidyalayam
16.03.2016-05.09.2018
J/Jaffna Hindu Ladies' College
06.09.2018-29.10.2022



Best Wishes

The teachers' Guild,
J/Jaffna Hindu Ladies' College

(c-5425)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல்

# முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றிய வடக்கு மாகாணம்



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் வட மாகாண பாடசாலை களின் வீரர்கள் பெற்று சாதனையைப் படைத்துள்ளார்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகிநடைபெற்று வருகின்றன.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சொபிசன் 4.10 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி யைச் சேர்ந்த கஸ்மிதன் 3.90 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத தையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த இ.அபிநயன் 3.80 மீற்றர் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (4-90)

## தேசிய மட்ட தடகளப் போட்டி

# பொலிகண்டி இ.த.க பாடசாலைக்கு வெள்ளிப்பதக்கம்



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செவ்வானம் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 16 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செவ்வானம் 27.79 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (4-90)

# பங்களாதேஷிடம் இந்தியா தோல்வி

இந்தியாவிற்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி ஒரு விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, 41.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 186 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 187 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 46 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், பங்களாதேஷ் அணி ஒரு விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் குண்டு போடுதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(படம்- கனகராஜா)




# புலமைப்பரிசில் பரீட்சை 2022

அநேக பெற்றோர்களின் வேண்டுகோளிற்கிணங்க

## வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

நடாத்தும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் - 5 மாணவர்களுக்கான

வெற்றித்தேர்வின் பிரதம ஆசிரியருடன் அனைத்து வளவாளர்களும்

கலந்து கொள்ளும்

## மாபெரும் செயலமர்வு

(C-5232)

காலம் - 07.12.2022 (புதன்கிழமை)
காலை 7.30 முதல் 12.30 மணி வரை
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்

காலம் - 07.12.2022 (புதன்கிழமை)
மதியம் 1.30 முதல் 5.30 மணி வரை
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் (மாலுசந்தி)

தொடர்புகளுக்கு - 0775388471, 0779543956


# மீண்டும் சந்தை...

துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் நீதி, சிறைச்சாலை விவகாரம், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கான பாதீட்டு ஒதுக்கீடு தொடர்பான நேற்றைய குழு நிலை விவாத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சோதனைகளின்பேர்து கைப்பற்றப்படும் போதைப்பொருட்களை மீண்டும் சந்தைக்கு வந்து மக்கள் கைகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இன்று பொருளாதாரம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. நாம் குறைவாக பேசினாலும், போதைப்பொருட்கள் என்ற விடயத்தினால் நாட்டுக்கு பாரிய ஆபத்து ஏற்படுகிறது.

தற்போது, 5 இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் ஐஸ் ஆபத்தான போதைப்பொருள் என்ற பட்டியலில் இருக்கவில்லை. இன்று ஐஸ் போதைப்பொருளை வைத்திருப்பவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கும்படி, கடந்த மாதம் சட்டம் திருத்தப்பட்டது.

பொலிஸாரால் கைப்பற்றப்படும் போதைப் பொருட்கள், வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே மீண்டும் சந்தைக்கு வருகின்றன.

சான்றுப்பொருட்களாக, பொலிஸாரின் சான்று அறைக்கு செல்லும் போதைப் பொருட்கள், கோதுமை மாவாக மாறும் நிலையில் போதைப்பொருட்கள் மீண்டும் சந்தைக்கு வந்து மக்கள் கைகளை அடைகின்றன.

கைப்பற்றிய போதைப்பொருட்களை மக்களுக்கு விற்ற பொலிஸார் மற்றும் போதைப் பொருள் பணியகத்தினருக்கு எதிராக கடந்த காலங்களில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே, குறித்த பொருளை கைப்பற்றியவுடன் விசாரணைக்கு தேவையான அளவை மாத்திரம் வைத்துக்கொண்டு மிகுதியை அழிப்பதற்கு சட்டத்திருத்தம் ஊடாக நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது என்றார். (ம-7)


# விழிநீர் அஞ்சலி



தோற்றம் 17.04.1939 மறைவு 04.12.2022

எமது பாடசாலையின் நலன்விரும்பியும் ICT பாட முன்னை நாள் ஆசிரியருமான திருமதி **சுதர்சினி மகிழ்னன்** அவர்களின் பாசமிகு தாயார்

## அமரர் சேதுகாவலர் பத்மாவதி

அவர்கள் நேற்று முன்தினம் (04.12.2022) காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி

(C-5431)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனையை அமுல்படுத்தியிருந்தால் போதைப் பாவனை தீவிரமடைந்திருக்காது

## மனம் திறந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றி இருந்தால் நாட்டில் இன்று போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தீவிரமடைந்திருக்காது.

நாட்டின் எதிர்கால நலன் கருதி மரண தண்டனையை இரத்துச் செய்ய எடுத்த தீர்மானத்தினால் இன்றும் நான் நெருக்கடிக்குள்ளாகியுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்றுத் திங்கட்கிழமை பாராளுமன்ற அமர்வு இடம்பெற்ற போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.(நி)

## மருந்துப் பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் அனைத்து மருந்துப் பொருட்களின் விலைகளும் அடுத்த மூன்று மாதங்களில் மீண்டும் அதிகரிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. பல வருடங்களாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் மக்களிற்கு குறைந்த விலைக்கு மருந்துகளை வழங்கி வருகின்றது. இந்த நிலையில் 80 வீதமான மருந்துகளின் கையிருப்புகள் முடிவடைந்து விட்டதால் பொதுமக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். டொலர் தற்போது 360 ரூபாவாக காணப்படுகின்றது. இதன் காரணமாக நாங்கள் இறக்குமதி செய்யும் மருந்துகளின் விலைகள் மாற்றமடையும் என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்தெரிவித்துள்ளது. (நி)

## க.பொ.த.சா/ தரத்தில் கட்டாயமாகிறது ICT

(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பாடத்திட்டத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை (ICT) ஒரு முக்கிய பாடமாக உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

கல்விச் சீர்திருத்தச் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்உலகளாவிய தொழில் சந்தையை எதிர்கொள்ளும் வகையில் இலங்கை மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கும் அவர்களை வலுப்படுத்துவதற்கும் ஆர்வமாக உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இச்செயற்பாட்டின் ஒரு பகுதியாக. க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான ஒரு முக்கிய தொகுதியாக ICT அமைவதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வியறிவு வீதம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இணையாக இருப்பதாகவும் நவீன கால சவால்களை எதிர்கொள்ள மாணவர்களுக்கு நடைமுறை அறிவை வழங்குவதன் முக்கியத்துவத்தை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ICT தொகுதியானது நனோ தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம், 'ரோபாட்டிக்ஸ்' மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு முதல் கல்வித் துறையில் சீர்திருத்தம் மற்றும் சீர் திருத்தத்தைக் கொண்டு வர கல்வி அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தொழில் சந்தையில் போட்டியிடுவதற்கு உள்ளூர் மாணவர்களை தயார்படுத்துவதற்கு தற்போதைய கல்வி முறை. பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள தொகுதிகள் போதுமானதாக இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.(நி)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி.கேமலதா சிவரூபன்

(நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், நிதிக்கிளை, உயர் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.)

யாழ்.பலாலியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட **திருமதி.கேமலதா சிவரூபன்** அவர்கள் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (13689)

மீளாத் துயருடன்...
உரிமையாளரும், பணியாளர்களும்,
சிறி நதியா நகைமாளிகை, N.S.R. ஜுவல்லறி.

## கண்ணீர் அஞ்சலி



யா/சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியை
திருமதி.தயாழினி இரகுநாதன்
அவர்களின் சகோதரி
அமரர்.
சுகந்தினி சிவானந்தராஜா

அவர்கள் 04.12.2022 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-5424)

கல்லூரிச் சமூகம்,
யாழ்/சன்மார்க்க மகா வித்தியாலயம்.


## இராசிபலன்

06.12.2022
கார்த்திகை 20, செவ்வாய்க்கிழமை
திரயோதசி முற்பகல் 7.55 மணிவரை
பரணி முற்பகல் 10.05 மணிவரை
சுபநேரம் -10.47-12.17 மணிவரை
இராகுகாலம்- 3.17-4.47 மணிவரை
திருக்கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்
சித்திரை
வள்ளவன்

**மேஷம்**: எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்**: கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் தேடி வரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்**: நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**: வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள்.

**ரிஷபம்**: சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறைகளும் ஏற்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**சிம்மம்**: எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**: பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள்.

**மிதுனம்**: வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பயணங்களின் போது [illegible]

**தனுசு**: உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் [illegible] நாள்.

**மீனம்**: குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வாங்கவும் செய்யாதே, கொடுக்கவும் செய்யாதே

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 640 வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் 39 வயதுடைய நபர் ஒருவரை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வரிகள் கட்டப்படாமல் 132 சிகரெட் பெட்டிகளை இலங்கைக்குள் கடத்தி அதனை உடைமையில் வைத்திருந்த நிலையிலையே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் டி.தியான் இந்திக்க சில்வா தலைமையிலான குழுவினரே கைது நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் மேலதிக விசாரணைகளை அடுத்து சந்தேக நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர். (4-6-33-104)

# இலவச யூரியா உர விநியோகம்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலையை எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பில் 60 பரப்பிற்கு உட்பட்ட வயல் நிலத்தில் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இன்று செவ்வாய்க்கிழமை இலவச யூரியா உரம் வழங்கி வைக்கப்படவுள்ளது.

தகுதியுடைய செய்கையாளர்கள் ஏக்கர் வரிச் சிட்டை, அடையாள அட்டை, குடும்ப அட்டை, முதற்கட்ட உரம் எடுத்த பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்குச் சென்று தமக்கான இலவச யூரியா உரத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

60 பரப்பிற்கு உட்பட்ட செய்கையாளர்களுக்கு 50 கிலோ கிராம் யூரியா உரம் இலவசமாக வழங்கி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)




வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி உணவு பாதுகாப்பு தொடர்பான கலந்தாய்வு கூட்டமானது பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் இடம்பெற்றது.

# துப்பாக்கி, வாளுடன் இருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் கிளிநொச்சி முறிப்பு பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3 உள்ளூர் துப்பாக்கிகள், 3 வாள்கள், 200 AK47 தோட்டாக்கள், 7 Kg ஈயம், 3 Kg காட்டுப்பன்றி இறைச்சி. என்பவற்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சந்தேகநபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# சிட்டி விளக்குகள் விற்பனை அமோகம்


(அராலி)

திருக்கார்த்திகை நாளின் விரத உற்சவத்தினை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள சந்தை வியாபார நிலையங்களில் திருக்கார்த்திகை விளக்கீட்டுக்கான விளக்குகளை கொள்வனவு செய்வதில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.



யாழ். நல்லூர் திருநெல்வேலி வியாபார சந்தைப் பகுதியில் சிறிய சிட்டி விளக்குகள், நிறமுட்டிய விளக்குகள் போன்றன விற்பனையில் சூடு பிடித்துள்ளது.

திருக்கார்த்திகை விரத உற்சவத்தில் இன்று கந்தன் ஆலயங்களில் குமராலய சொர்க்கப்பானை தீபமும் நாளை விஷ்ணு ஆலயங்களில் விஷ்ணு சொர்க்கப்பானை தீபமும் வீடுகளில் திருக்கார்த்திகை விளக்குகள் ஏற்றுதலும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6-104)



அலியான்ஸ் ஆயுட்காப்புறுதி நிறுவனத்தின் திருநெல்வேலிக் கிளை மீள் திறப்பு விழா அண்மையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் உதவிப் பொது முகாமையாளர் கோ.ஶ்ரீவரதன் தலைமையில் இடம்பெற்றது.

# சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நிகழ்வொன்றை ஒழுங்கு செய்துள்ளது.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி. திருமதி. ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி. த.சத்தியமூர்த்தி பிரதம விருந்தினராகவும் வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் செ.அகல்யா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (4)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட முதுநிலை விரிவுரையாளர், மகப்பேற்று பெண் நோயியல் மருத்துவ நிபுணர் க.குருபரன் எழுதிய தாயாகிய தனித்துவம் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ்.போதனா மருத்துவமனையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (4-6-33)

# பருத்தித்துறை நகர சபையின் பாதீடு தோற்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகரசபை வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் யோ.இருதராஜா சபையில் சமர்ப்பித்தார்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக ஏழு வாக்குகளும் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக எட்டு வாக்குகளும் பதிவானது. 15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையில் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக இலங்கை தமிழரசுக் கட்சியின் 4 பேரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சுயேட்சை தலா ஒருவருமாக வாக்களித்தனர்.

வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 6 பேரும் தமிழரசுக் கட்சி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தலா ஒருவரும் வாக்களித்தனர். (4-6-104-33-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மாகாணத்திலுள்ள காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி சபை பெண் உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர். (படம்-சிவசாந்தன்)


# சேவை நலன் பாராட்டு

திருமதி. குமுதினி உருத்திரகுமாரன்
(இசை கலைமணி)




கொழும்பு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்
1989.07.21-1995.03.13
யாழ்.ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
1995.03.14-1995.06.20
யாழ்.புங்குடுதீவு மகா வித்தியாலயம்
1995.06.21-1998.06.01
யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்
1998.06.02-2004.06.15
யாழ்.உரும்பிராய் சைவ தமிழ் வித்தியாலயம்
2004.06.16-2006.05.09
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
2006.05.10-2015.04.03
யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயம்
2015.04.04-2022.12.31 (3நாட்கள்)
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
2015.04.04-இன்று வரை
(சி-5425)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக்கழகம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"குடும்பங்களில் அன்புதனைப் பகிர்ந்திடுவோம்...
அகம் தன்னில் அன்பால் மகிழ்ந்திடுவோம்...
அன்பின் வாசனை பரப்பிடுவோம்... அகிலமெங்கும்
அகன்றிடும் வன்முறை இப்போதே...!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம் (C-5323) Jaffna Social Action Center (JSAC)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா:சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:விவசாய போதனாசிரியர்<br>எதிர்பார்ப்பு:படித்த தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/13188 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:உயர் பதவி<br>தொ.இ:G/11420 |
| பிறப்பு:1994இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: சூரி4 செவ் 3 இல்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு:வெளிநாட்டில் பிறந்த மணமகள்<br>தொ.இ: B/13189 | பிறப்பு: 1992இந்து<br>நட்சத்திரம்:பூரம் 4<br>கி.பா:57¾ சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: லண்டனில் பிறந்த வைத்தியர்<br>தொ.இ:G/11428 |
| பிறப்பு:1982இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: சூரி1 செவ் 3 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்: BSc(தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் சுவிஸ், ஜேர்மன் யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13190 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்:ரோகினி 1<br>கி.பா:சூரி 10 செவ் 1 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:ACCA கணக்காளர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ: G/11435 |
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா:6 ¼ சூரி 9 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்HNDA பட்டதாரி மொபைல் கடை உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/13191 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா:46 ¾ சூரி . செவ் 4 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில் BSc ,MSc (அரச தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் வைசபோசனம் மட்டும்<br>தொ.இ: G/11440 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# ஐரோப்பாவின் எல்லைப்புறத்தில் சேர்பிய நாட்டின் தலைநகரான பெல் கிறட் நகரில் அமைந்துள்ள Megatrend University இல் உயர் கல்வியை தொடர்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

உலகின் பல நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ள சேர்பிய நாட்டில் உள்ள அரச அங்கீகாரமுடைய Megatrend University இலங்கைக்கு வந்து தனது இலங்கைக்கான கிளையை திறக்கவுள்ளது. இந் நடவடிக்கையை ஜேர்மனியில் கடந்த 40 வருடங்களாக வாழ்ந்து வருபவரும் அங்கே சட்ட நிறுவனம் ஒன்றில் சட்ட ஆலோசகருமான தேசமான்ய எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன் இவ்விடயத்தை இலங்கை அரசின் அனுமதியுடன் சேர்பியாவின் Megatrend பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆரம்பித்து வைக்கவுள்ளார். அனைத்து துறைசார் பீடங்களும் மற்றும் இணைதொழில்நுட்ப தொழில்சார் கல்வியும் கற்பிக்கப்படும்.

இதற்கான கிளை நிறுவனம் யாழ்.நகரில் 2023 ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. இப் பல்கலைக்கழகத்தில் ஐரோப்பாவுடன் ஒப்பிடுகையில் குறைந்த செலவில் உயர் கல்வியை கற்க முடிவதுடன் சில மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வசதிகளும் பகுதிநேர வேலைவாய்ப்பினையும் பெற்றுக் கொள்வதற்கான சகல ஒப்பந்தங்களிலும் பல்க்லைக்கழக தலைவரும் இலங்கை சார்பாக எம்.ரி.எஸ்.இராமச்சந்திரனும் சேர்பியாவின் பெல்கிராட் நகரில் 24.11.2022 பூரண ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளனர்.

**Note:-** பொருளாதார நிலையை கருத்திற் கொண்டு மாணவர்களுக்கான பகுதிநேர வேலைவாய்ப்பிற்கான அனுமதியும் சேர்பிய நாட்டின் கல்வி அமைச்சர் வழங்கியுள்ளார். ஏற்கனவே வடமாகாணத்தில் 23,000 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு 2 ஆவது மொழியை கற்பித்து





சாதனை படைத்த இராமச்சந்திரன் மீண்டும் ஐரோப்பா நாட்டில் உள்ள பல்கலைக் கழகத்துடன் இணைந்து வடபகுதி இளைஞர்களுக்கு குறிப்பாக வருடத்திற்கு 500 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சரும் எம்.ரி.எஸ். இராமச்சந்திரனும் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Megatrend- பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள் எமது காரியாலயத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விபரங்களிற்கு:-
யாழ்ப்பாண காரியாலயம்
இல. 09 ஆஸ்பத்திரி வீதி

தொடர்புகளுக்கு
077 271 1181
021 223 2072

(13685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 44





இப்போது தங்களில் ஒருத்தியை மட்டும் அழைத்துக் கொண்டு குந்தவைப் பிராட்டி கரையில் இறங்கி 'போய்விட்டு விரைவில் வருகிறேன்' என்றதும் அவர்களுடைய கண்களில் ஏமாற்றமும் அசூயையும் தோன்றின.

கரையில் குதிரை பூட்டிய ரதம் ஒன்று சித்தமாயிருந்தது. "வானதி! ரதத்தில் ஏறிக்கொள்!" என்றாள் குந்தவை தன் தோழியைப் பார்த்து. வானதி ஏறியதும் தானும் ஏறிக் கொண்டாள் ரதம் வேகமாய்ச் சென்றது.

"அக்கா! நாம் எங்கே போகிறோம்? எனக்குச் சொல்லலாமா?" என்று வானதி கேட்டாள். "சொல்லாமல் என்ன? குடந்தை சோதிடர் வீட்டுக்குப் போகிறோம்!" என்றாள் குந்தவை. "சோதிடர் வீட்டுக்கு எதற்காகப் போகிறோம், அக்கா? என்னத்தைப் பற்றிக் கேட்பதற்காக?"

"வேறு எதற்கு? உன்னைப் பற்றிக் கேட்பதற்காகத்தான். சில மாத காலமாக நீ இப்படிப் பிரமை பிடித்தவள் போலும் உடல் மெலிந்தும் வருகிறாயே? உனக்கு எப்போது பிரமை நீங்கி உடம்பு தேறும் என்று கேட்பதற்காகத்தான்!"

"அக்கா! தங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு; எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. என்னைப் பற்றிக் கேட்பதற்காகப் போக வேண்டாம் திரும்பி விடுவோம்!" "இல்லையடி, அம்மா, இல்லை! உன்னைப் பற்றிக் கேட்பதற்காக இல்லை; என்னைப் பற்றிக் கேட்ப தற்காகத் தான் போகிறேன்."

"தங்களைப்பற்றி என்ன கேட்டுத்தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்? ஜோசியரிடம் கேட்டு என்ன தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்." "எனக்குக் கல்யாணம் ஆகுமா? அல்லது கடைசி வரையில் கன்னிப் பெண்ணாகவே இருந்து காலம் கழிப்பேனா என்று கேட்கப் போகிறேன்."

"அக்கா! இதற்கு ஜோசியரிடம் போய்க் கேட்பானேன்! தங்களுடைய மனதையே அல்லவா கேட்க வேண்டும்? தாங்கள் தலையை அசைக்க வேண்டியதுதான்! இமய மலை முதலாக குமரிமுனை வரையில் உள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வரமாட்டார்களா? ஏன், கடல் கடந்த தேசங்களிலேயிருந்தெல்லாம் கூட வருவார்களே! தங்களைக் கை பிடிக்கும் பேறு எந்த வீர ராஜகுமாரனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ? அதைத் தாங்கள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்!"

"வானதி நீ சொல்வதெல்லாம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் அதற்கு ஒரு தடை இருக்கிறது. எந்தத் தேசத்து அரச குமாரனையாவது மணம் புரிந்து கொண்டால் நான் அவனுடைய நாட்டுக்குப் போக வேண்டி வருமல்லவா? எனக்கு இந்தப் பொன்னிநதி பாயும் சோழ நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குப் போகப் பிடிக்கவே இல்லையடி! வேறு நாட்டுக்குப் போவதில்லை என்று நான் சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்..."

"அது ஒரு தடையாகாது; தங்களை மணம் புரிந்து கொள்ளும் எந்த ராஜகுமாரனும் தங்கள் காலில் விழுந்து கிடக்கும் அடிமையாகவே இருப்பான். இங்கேயே இருக்க வேண்டும் என்றாலும் இருந்து விட்டுப் போகிறான்."

"ஆகா! எலியைப் பிடித்து மடியில் வைத்துக் கட்டிக் கொள்வது போல் வேறு தேசத்து ராஜகுமாரனை நம் ஊரிலேயே கொண்டு வைத்துக் கொள்ளவா சொல்கிறாய்? அதனால் என்னென்ன தொல்லைகள் எல்லாம் விளையும் தெரியுமா?"

"எப்படியும் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் ஒரு நாள் கல்யாணம் செய்து கொண்டுதானே தீர வேண்டும்?" "அப்படி ஒரு சாஸ்திரத்திலும் சொல்லியிருக்கவில்லையடி, வானதி! ஔவையாரைப் பார்! அவள் என்றும் கன்னி அழியாத கவீசுவரியாகப் பல காலம் ஜீவித்திருக்கவில்லையா?" "ஔவையார் இளம் பிராயத்திலேயே கடவுளின் வரத்தினால் கிழவியாகப் போனவள் தாங்கள் அதைப்போல் ஆகவில்லையே?" (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## நானே மணமகன்!

(நேற்றைய தொடர்ச்சி)

பெருமாள் தன் நிலத்தைப் பணத்திற்குப் பதில் எழுதி வைப்பதாகக் கூறினான்.

ஆனால் அவனது மகள் தேவி "அப்பா! உங்கள் பேச்சை இதுவரை நம்பாமல் பணம்தான் வேண்டும் என்று இவர்கள் பிடிவாதம் பிடித்தார்கள். பணத்தாசை பிடித்த இவர்கள் வீட்டு மருமகளாகப் போக நான் தயாராக இல்லை" என்றாள். அதுகேட்டு மாப்பிள்ளையின் தந்தை. "இந்த பெண் எவ்வளவு திமிராகப் பேசுகிறாள்! இவளை என் மகன் திருமணம் செய்து கொள்ளவே மாட்டான்" எனக் கூறி அப்போதே தன் குடும்பத்தோடு கிளம்பிப் போய் விட்டான்.

பெருமாள் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். ஒரு பெண்ணின் கல்யாணம் தாலி கட்டும் போது நின்று விட்டால் அவளுக்கு மறுபடியும் கல்யாணம் நடப்பது சிரமமே. அவனது திகைப்பைக் கண்ட கண்ணன் "கவலைப்பட வேண்டாம். சிறுவயதிலிருந்தே தேவியை எனக்கு பிடித்துப் போயிற்று. இதே முகூர்த்தத்தில் நான் அவளை மணந்து கொள்கிறேன்.என் தாய் தந்தையரை நான் சமாதானப் படுத்திக் கொள்கிறேன்" என்று கூறி அதே முகூர்த்தத்தில் தேவியை மணந்து கொண்டான்.

கண்ணன் தேவியை அழைத்துக் கொண்டு கொடியூருக்குச் சென்றான். ஆனால் கோதண்டம் அவனைக் கடிந்து கொண்டு "உனக்கு இனி இந்த வீட்டில் இடமில்லை. நீ உன் மனைவியுடன் எங்கள் கண்ணில் படாமல் எங்கேயாவது போய் வாழ். என் மகன் என்பதற்காகக் கொஞ்சம் பணம் கொடுக்கிறேன்" என்று கூறிப் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டான்.

கண்ணன் தேவியுடன் புலியூருக்கே திரும்பிச் சென்றான். தன் தந்தை கொடுத்த பணத்தில் கொஞ்சம் நிலம் வாங்கி விவசாயம் செய்யலானான். நாளாவட்டத்தில் அவன் விவசாயம் நன்கு நடந்தது. அவன் எல்லோருக்கும் உதவி ஊராரின் நன்மதிப்பையும் பெற்றுவிட்டான்.

கொடியூர் கடற்கரை ஓரமாக அமைந்த சிறிய ஊர் கண்ணன் வீட்டை விட்டு வந்து மூன்றாவது ஆண்டில் கடல் பொங்கி கொடியூருக்குள் நுழைந்து பல மைல் தூரத்திற்கு மணலைப் பரப்பி வயல்களை எல்லாம் பாழாக்கி வீடுகளையும் சேதப்படுத்தி விட்டது.

இதில் வீடுவாசல், வயல் எல்லாவற்றையும் இழந்தவன் கோதண்டமே ஊரே பாழானதால் அங்கிருந்த எல்லோரும் வெவ்வெறு இடங்களுக்கு தம் குடும்பங்களோடு போய் விட்டனர். இவ்வாறு வந்த சில குடும்பங்களுக்குக் கண்ணன் தலைமையில் புலியூர் புகலிடம் அளித்தது.

கண்ணன் தன் தாய் தந்தையரும் சகோதரர்களும் எங்கு சென்றார்களோ எனத் தேடலானான். அவனோடு தேவியும் பெருமாளும் சேர்ந்து தேடலாயினர். அவர்கள் தம் ஊரை விட்டுக் கொஞ்சதூரம் போனதுமே கோதண்டத்தையும் அவனது குடும்பத்தவரையும கண்டு விட்டனர். அவர்கள் கண்ணனையும் தேவியையும் பெருமாளையும் பார்த்ததுமே கண்ணீர் வடித்துக் கதறி அழுதார்கள்.

கண்ணன் தன் தந்தையின் கரங்களைப் பற்றிக் கொண்டு "அப்பா, கவலைப்படாதீர்கள் நாம் எல்லோரும் இங்கு ஒன்றாகவே இருப்போம். நம்மில் ஏற்றத் தாழ்வும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடும் இராது. கொடியூர் முன்போலாகப் பல ஆண்டுகள் ஆகலாம். அது பற்றிக் கவலைப் பட வேண்டாம்" என்றான். தேவியும் பெருமாளும் அவர்களை வணங்கித் தம்முடனேயே இருக்குமாறு வேண்டினார்கள்.

கண்ணனின் தாராள மனப்பான்மை கண்டு கோதண்டமும் அவனது இரு மகன்களும் உள்ளம் பூரித்துப் போயினர். அவர்கள் தம் முந்தைய செய்கைகளுக்காக வருந்தினர்.

அவர்களது அகம்பாவம் அழிந்தது. கண்ணனுடனும் பெருமாளுடனும் சேர்ந்து அவர்கள் புது வாழ்வைத் தொடங்கினார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் பிச்சைக்கார உருவிலே இருந்தாலும் கௌரவிக்கப்படும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸார் நேர்மையாக நடந்தால் சமூகம் தானாகத் திருந்தும்

நடுவீதியில் – நடுச்சாமத்தில் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் நடத்துகின்ற மனநிலை.

இதையும் கடந்து அவ்வீதியால் பயணித்த தெல்லிப்பழை வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியின் வாகனத்தை சேதப்படுத்தி அவர்களின் பயணத்துக்குத் தடை செய்தமை என்ற செய்திகளை அறியும்போது எங்கள் இளம் சமூகம் எங்கே போகிறது என்ற கேள்வி எழவே செய்யும்.

தவிர, எங்கள் எதிர்காலச் சந்ததிக்கு நாம் கற்றுக்கொடுக்கின்ற பாடம் என்னவாக இருக்கப் போகிறது என்ற சிந்தனையும் நம்முள் எழும்.

பொதுச்சட்டம், பொதுவிதிமுறை என்பவற்றைப் பின்பற்றாமல் தாங்கள் நினைத்தபடி வாழலாம் என்ற நினைப்பு அமுலாகுமாக இருந்தால், அது மிகப்பெரும் ஆபத்தாக முடியும்.

அதாவது தாங்கள் எது செய்தாலும் அதனை யாரும் தட்டிக் கேட்க முடியாதென்ற நிலைமை வந்துவிட்டால், அப்பாவி மக்கள் வீடுகளுக்குள் முடங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிடும்.

இவ்வாறு ஒரு தரப்பு அட்டகாசம் செய்யும் அளவுக்கு துணிந்துள்ளதென்றால் இதற்குக் காரணம் யாது? என்று ஆராயும்போது தான், இவ்வாறான அட்டகாசக் குழுக்களுக்கு பொலிஸாரிடம் மிகுந்த செல்வாக்கு இருப்பது தெரியவரும்.

ஆம், சண்டித்தனக் குழுக்கள் உள்ளிட்ட அத்தனை சட்டவிரோத செயல்களுடனும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் குறிப்பிட்ட பொலிஸாருக்குமிடையில் மிகப்பெரிய தொடர்புகள் உண்டு.

பொலிஸாரின் செல்வாக்குள்ளவர்கள் எவரையும் அதட்டவும் சண்டித்தனம் காட்டவும் முற்படுவர்.

உண்மையில் பொலிஸார் தங்களின் தொழிற்கடமையை நேர்மையுடனும் சத்தியத்துடனும் செய்வார்களாயின் அட்டகாசக் குழுக்களும் சண்டித்தனச் சமூகங்களும் உருவாகுவது முற்றுமுழுதாகத் தவிர்க்கப்படும்.

இதற்கு மேலாக, எங்கெல்லாம் சட்டவிரோத செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றனவோ அங்கெல்லாம் அதனுடன் தொடர்புபட்டவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் மிக நெருக்கமான தொடர்பு உண்டென்பது நிராகரிக்க முடியாத உண்மை.

ஆம், அண்மைக்காலமாக எங்கள் வட பகுதியில் நடக்கின்ற அத்தனை சட்டவிரோதச் செயற்பாடுகள் மற்றும் அட்டகாசங்கள், அடாவடித்தனங்கள் என்பவற்றின் பின்னால், பொலிஸாரின் ஆதரவும் அவர்களின் துணையும் இருப்பது சர்வநிச்சயம்.

ஆக, தாங்கள் எவ்வாறு நடந்து கொண்டாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் பொலிஸார் தங்களைக் காப்பாற்றுவர் என்று நம்பி சிறைக்குள் இருக்கின்ற பலரின் நிலைமை பரிதாபத்துக்குரியது.

எனவே முதலில் பொலிஸாரின் செல்வாக்கு அவர்களின் பக்கச்சார்பு, அவர்களின் பின்னணி என்பவற்றை அடியோடு ஒழித்து பொலிஸ் சேவை தூய்மைப்படுத்தப்படுமாயின், பொது மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் தாமாக இல்லாது போய்விடும்.

# இலங்கை விமான சேவையால் 12.8 பில்லியன் ரூபாய் இழக்கப்படுகிறது

## தேர்தலுக்கு 11 பில்லியன் மட்டுமே செலவு பாராளுமன்றில் சுமந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை விமான சேவைகளின் நிதி தொடர்பிலான 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையின் பிரகாரம் 12.8 பில்லியன் ரூபாய் இழக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது முதல் அரையாண்டில் இழந்த தொகையாகும். அதில் வெளிநாட்டு செலாவணிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாதமும் நாம் இந்த இழப்புகளை சந்தித்து வருகின்றோம். நான் இந்த புள்ளிவிபரங்களை குறிப்பிடுவதற்கு அடிப்படை காரணம் என்னவென்றால் ஒரு தேர்தலை நடத்துவதற்கான செலவு 11 பில்லியன் மட்டும்தான்.

தேர்தலைப் பற்றி பேசுகின்றபோது அதற்கு எவ்வாறு செலவழிப்பது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. ஆனால், ஒருமுறை இலங்கைவிமான சேவைக்கு ஏற்படுகின்ற இழப்பு ஒரு தேர்தலுக்கு ஏற்படுகின்ற செலவைவிட அதிகமானதாகும்.

இவ்வாறு பார்க்கும் போது தேர்தலை எவ்வாறு நடத்துவது என்று கேட்டுக்கொண்டு இருப்பது அர்த்தமற்ற விடயமாகும். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்தலை நடத்த வேண்டிய அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் துறைசார்ந்த அமைச்சர்களின் கவனத்துக்கு ஒரு விடயத்தை கொண்டுவர விரும்புகின்றேன். உங்களது நடத்தைகளின் மூலம் இந்த பாராளுமன்றம் அதன் ஆணையை இழந்திருக்கின்றது. நீதி, அரசியலமைப்பு தொடர்பிலான அமைச்சர் ஒரு விசித்திரமான உரையை நிகழ்த்தியதாக நான் உணருகின்றேன் என்றார். (ம-7)

## கடற்றொழிலாளர் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் சாதாரண தர பெறுபேறுகளை சமர்ப்பிக்கவும் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பெறுபேறுகளை சமர்ப்பிக்குமாறு, வடமாகாண ஆளுநரின் கடிதத்துக்கமைய, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு வடக்கு மாகாண கல்விப் புணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, கடற்றொழிலாளர்கள் சமூகத்தை சேர்ந்த மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பெறுபேறுகளை 2011 இல் இருந்து 2021 வரை பகுப்பாய்வு செய்து டிசம்பர் 10ம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு மற்றும் பெறுபேறுகள் குறைவடைதல் தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கையை கோரியதாக தெரிவித்தார். (4-6,33)

## பால் உற்பத்தியை அதிகரிக்க இந்தியாவின் தொழில்நுட்பம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் தங்கியிருப்பதனை தவிர்க்கும் வகையில் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால திட்டத்தை தயாரிக்கும் நோக்கில் இந்திய தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டின் அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

அது தொடர்பில், இந்திய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் (NDDB) இந்தியாவின் அமுல் பால் நிறுவனமும் இணைந்து இந்நாட்டில் திரவப்பால் உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

குறுகிய மற்றும் நடுத்தர கால திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், நீண்ட கால திட்டத்தினூடாக இலங்கையை பாலில் தன்னிறைவடையச் செய்வதே இதன் நோக்கம் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது. (ம-7)

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஒரு மாத அவகாசம்

(கொழும்பு)

2021க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் தொடர்பில், மீள்பரிசீலனை செய்ய எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில், இவ்வருடம் 44,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்த ஆண்டு 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்திற்கு அதிகளவிலான மாணவர்கள் தெரிவாகியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இது வென பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (ம-7)

## காரைநகர் முருகன் ஆலய பலிபீட மயில் உடைப்பு

(கொழும்பு)

யாழ்.காரைநகர் - பயிரிக்கூடல் முருகன் ஆலய பலிபீடமயில் நேற்றிரவு காடையர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆலய பூசகரால் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## எதிர்வரும் 4 நாட்களுக்கு மின்வெட்டு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 4 நாட்களுக்கான மின்வெட்டு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி டிசம்பர் 06, 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் ஒவ்வொரு நாளும் 2 மணித்தியாலம் 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் போயா தினத்தில் ஒரு மணி நேரம் மின்சாரம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## வளித்தர கண்காணிப்பு நிலையம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபையினால் பழைய பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்ட வளித்தர கண்காணிப்பு நிலையம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வளித்தர கண்காணிப்பு நிலையத்தின் முக்கிய நோக்கம் வளிமண்டல மாசுக்களின் செறிவளவை பதிவு செய்தல் ஆகும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய அறிவுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் வைர விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் சைவசமய அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 24,25 சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

தனிநிலைப்போட்டிகள் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் குழுநிலைப் போட்டிகள் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளன.

வடக்கு மாகாண மட்டப் போட்டிகள் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் கிழக்கு மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயத்திலும் மத்திய மாகாண மட்டப் போட்டிகள் கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலயத்திலும் மேல்மாகாண மட்டப் போட்டிகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன. (4)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### 2023 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தை, இறைச்சிக் கடைகளை 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

01. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் **06.12.2022 - 19.12.2022** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் **தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராம சேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும்** கொண்டுவருதல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- **20.12.2022 ஆம் திகதி செவ்வாய் கிழமை மு.ப 10.00 மணி**

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- **20.12.2022 ஆம் திகதி செவ்வாய்கிழமை மு.ப 10.00 மணி**

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். **20.12.2022 முற்பகல் 10.00** மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதன் இணைப் பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2023 ஆம் ஆண்டு பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.01.2023 – 31.12.2023) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மரக்கறிச் சந்தை, மீன்சந்தை, வாகன தரிப்பிடம் உள்ளடங்கலாக) | 13,101,001.00 | 131,000.00 | 1,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 364,210.00 | 4,000.00 | 1,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,560,500.00 | 16,000.00 | 1,000.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,560,500.00 | 16,000.00 | 1,000.00 |

**குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

**திருமதி.சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(சி-5426)

# வவு.மெனிக்பாமிலுள்ள புகையிரதக் கடவையை சீரமைத்து தருமாறு கோரி போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா மெனிக்பாமிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவையை சீரமைத்து காவலாளியை நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மெனிக்பாம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புகையிரத விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்திருந்த நிலையிலே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது.

குறித்த கடவையில் நான்கு, ஐந்து விபத்து சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததுடன் அண்மையில் பேருந்து ஒன்றும் விபத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கிராமத்தில் 1500 குடும்பங்கள் வசித்து வருவதாகவும் குறித்த கடவையினூடாக பாதுகாப்பற்ற போக்குவரத்தை தாம் மேற்கொண்டு வருவதாகவும் அத்தோடு புகையிரதம் சீரான நேரத்தில் வருகை தராததால் எந்த நேரத்தில் புகையிரதம் வரும் என்று தெரியாத நிலையிலே குறித்த பாதையினூடாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

புகையிரதக் கடவையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு 7500 ரூபா மாத்திரமே ஊதியமாக வழங்கப்படுவதால் யாரும் குறித்த பணிக்கு செல்ல விரும்புவதில்லை என குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த போராட்ட இடத்திற்கு வருகை தந்த பறயனாளங்குளம் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி குறித்த கடவையில் பணியாற்ற விருப்பம் தெரிவித்து மூவர் விண்ணப்பித்துள்ளாதாகவும், அதற்குரிய நடவடிக்கையை மிக விரைவில் எடுப்பதாகவும், சமிக்ஞை விளக்கினை பொருத்துவதற்கு புகையிரத திணைக்களத்திற்கு தாம் சிபாரிசு செய்வதாகவும் தெரிவித்தார். மக்களையும் எழுத்து மூலமான கோரிக்கை கடிதத்தை புகையிரத திணைக்களத் திற்கு ஒப்படைக்குமாறும் தெரிவித்தார். (4-6-299)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக நெருக்கடிகளும் போதைக் கலாசாரமும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை புதன் கிழமை மாலை 4 மணியளவில் கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் தலைமை உரையினை யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சி.யமுனானந்தா ஆற்றவுள்ளதுடன், கருத்துரையினை அருட்தந்தை கலாநிதி. வின்சன்ற் பற்றிக் ஆற்றவுள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 250 |
| தக்காளி | 200 | 200 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 120 | 160 | 150 |
| கோவா | 260 | 240 | 280 | 300 |
| கரட் | 300 | 450 | 420 | 450 |
| பூசணி | 100 | 150 | 100 | 120 |
| புடோல் | 260 | 260 | 160 | 240 |
| வாழைக்காய் | 120 | 120 | 140 | 140 |
| சின்ன வெங்காயம் | 550 | 500 | 650 | 700 |
| பெரிய வெங்காயம் | 220 | 180 | 180 | 250 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 160 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 250 | 240 | 280 | 300 |
| லீக்ஸ் | 300 | 400 | 450 | 480 |
| பீற்றூட் | 400 | 400 | 430 | 400 |
| கறிமிளகாய் | 650 | 800 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 150 | 250 |
| தேசிக்காய் | 250 | 250 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 260 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | 420 | -- |
| முள்ளங்கி | 200 | 240 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 80 | 50 | 45 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டீசல் விலை...

என.

இதற்கமைய, டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது.

இதன்படி, தற்போது 430 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் டீசல் நள்ளிரவு முதல் 420 ரூபாயாக குறைக்கப்படவுள்ளது. (ம-7)

## லிட்ரோ எரிவாயு...

12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 250 ரூபாயினாலும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 100 ரூபாயினாலும் 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 45 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் லாப்கஸ் விலையில் எந்த மாற்றமும் இல்லை என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7)

## யாழிலிருந்து...

சேவைகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

விமான நிலையத்தில் விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தியாவில் இருந்து முதல் விமானம் இலங்கைக்கு வரவுள்ளது.

இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையமாக பலாலி சர்வதேச விமான நிலையம் 2019 ஒக்ரோபர் 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

எனினும், கோவிட் -19 தொற்று காரணமாக அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டது.

அத்துடன், சில இந்திய விமான நிறுவனங்கள் மீண்டும் சேவைகளை முன்னெடுக்க தயாரான போதிலும் சில தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் அதற்கு சவாலாக அமைந்தது என்றார். (ம-7)

## யாழ் - கொழும்பு...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்து, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. (ம-7,100,316)

## ஓர் அலகு மின்...

பிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஓர் அலகுக்கு 56.90 ரூபாய் என்ற நிலையான கட்டணம் அறவிடப்பட வேண்டும். அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நேரடி பண உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்பது தமது யோசனை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின்படி நாட்டில் 67 இலட்சத்து 9 ஆயிரத்து 574 மின்சார வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும், ஓர் அலகிற்கு தற்போதைய சராசரி கட்டணம் 29.14 ரூபாய் அறவிடப்படுகிறது.

இதனால் 423.5 பில்லியன் ரூபாய் பற்றாக்குறை ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (ம-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

ளார்.

தாம் தற்போது நாட்டின் ஜனாதிபதியாக இல்லாத காரணத்தினால் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கெதிராக அன்றி அரசாங்கத்திற்கு எதிராக வழக்கை தொடர்ந்து நஷ்டஈடு கோர வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் பிரதிவாதி பட்டியலிலிருந்து தம்மை நீக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவினால் ஏற்கெனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பிற்கு எதிராக மைத்திரிபால சிறிசேனவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 28ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## தேசிய பிரச்சினை...

ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களைத் தொடர்பு கொண்டு அந்தத் திகதியில் அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அவர் பணித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று தம்மைச் சந்தித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் ஜனாதிபதியே நேரடியாக இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் வசதிகளையும் கணக்கெடுத்து, எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தக் கூட்டத்தைக் கூட்டுமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவைக் கேட்டுள்ளேன். அவர் உரிய ஒழுங்குகளைச் செய்வார் என்று ஜனாதிபதி என்னிடம் கூறினார்" என்று ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவித்தார்.

இந்த வாரத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதம் மற்றும் அதன் மீதான வாக்கெடுப்பு முடிந்த பின்னர், 11ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் இந்தக் கூட்டத்தை நடத்தலாம் என பாராளுமன்றத்தில் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரசி...

இலங்கையில் தேர்தல் நடத்துவதற்கு இது சரியான தருணம் என்று தெரிவித்த முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகுதி தனக்கு இல்லையென்றாலும், அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன் என்று தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஊடகமையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் நேற்றுத் திங்கட்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைய தேர்தல்களில் வெற்றி பெற ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவைஆதரித்த மக்களுக்கு நன்றி தெரிவித்த அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமல் போனமைக்கு மன்னிப்பும் கோரியதுடன், பின்னடைவுகளை நிவர்த்தி செய்து, தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஆளுகை அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகுதி தனக்கு இல்லையென்றாலும், அரசியலில் தொடர்ந்தும் இருப்பேன் என்றும் வலியுறுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தமை மிகவும் சரியான தீர்மானம் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சி பிளவுபட்டுள்ளதாக சில கட்சிகள் மத்தியில் கருத்துக்கள் இருந்தாலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஒரு போதும் பிளவுபடவில்லை எனவும் ஒரு சிலர் மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தாலும் கட்சி பிரதானமாக நாட்டு மக்களுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1415
வெற்றி இலக்கங்கள்
மீனம் 8 8 1 7 1 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.05
சீட்டிழுப்பு இலக்கம் - 990
C 18 49 55 58
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 3202
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
R 14 39 64 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1308
P 16 22 52 61 68

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 269
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 11 16 46 51 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/05
சீட்டிழுப்பு இலக்கம் 4960
U 3 6 3 3 6 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1935
சீட்டிழுப்பு திகதி 2022.12.05
நிறம் ஊதா
தினம் திங்கட்கிழமை
ரூ. 4,440,040/-
M 03 14 56 61
6062 278

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.05
சீட்டிழுப்பு இல : 4096
வர்ணம் : நீலம்
ரூ. 4,861,820/-
வெற்றி இலக்கங்கள்
01 26 28 40 J

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது
ரூ. 5,329,580.20
திகதி 2022-12-05
வெற்றி வாரம் 3647
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
07 14 24 30
கும்பம்
ரூ. 14,091,860.20

அதிர்ஷ்ட ஆண்டு
சீட்டிழுப்பு வாரம் 1111
இள நீலம்
2022.12.05 திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 26 12 43 61 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 283,202,111.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1876
சீட்டிழுப்பு திகதி 2022-12-05
வெற்றி இலக்கங்கள்
46 47 64 67 Y
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,671,836/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1761
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.12.05
ரூ. 3,895,500/-
வெற்றி இலக்கங்கள்
23 44 46 73 S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

யத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு இதுதொடர்பாக அறிவுறுத்தி பாராளுமன்றத்தில் அது தொடர்பில் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுப்பேன் என சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை பொதுஜன பெரமுன எம்.பி ஜகத்குமார, விமல் வீரவன்ச உள்ளிட்ட பலரும் மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் இணக்கம் தெரிவிக்கத் தயாரில்லை.

எனினும் மின் உற்பத்திக்கான அதிகரித்த செலவு, உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிப்பும் இதற்கு முக்கிய காரணமாகும் என்றார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13630)

076 825 7716 (ஆகாஸ்)

**DCM - யாழ் நகர் வணிகக் கல்வி**

இறுதிக் கருத்தரங்கு

(வேம்படி உயர்தர பாடசாலை அருகாமை)

06.12.2022

செவ்வாய் 2.30 - 5.30 மணிவரை

- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
- 30 மணித்தியாலங்கள் (30+)
- வெளி மாணவர்களும் பங்குபெற்ற முடியும்
- கையேடுகள் வழங்கப்படும்

(C-5427)

N.S.KAPIL BBM(Hons),spl.in M.mar

077 778 9815
077 278 8489

**யாழ் நகரில் DCM**

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**வரலாறு கருத்தரங்கு - A/L 2022**

காலை 8.00 - 4.00 மணி வரை

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். 07.12.2022

திரு.S.Y.R.இரவீந்திரன் B.A (Hons)
திரு.S.S.Y பிரதீபன் B.A(Hons), M.A

☏ - 077 772 8471 (C-5429)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

- Tvs Scooty peptt (BEG)
- Honda Lacustom (250 cc)
- Scooty Ranamoto Pattay(BEF)

077 887 5037
075 887 5036

**ஜெனரேற்றர் விற்பனைக்கு**

- 30 Kva Pramac ஜெனரேற்றர் (media Spain) (sound proff)

077 887 5037
075 887 5036 (13694)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,
076 097 3127

**TECHNO WORLD**

தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L** புதிய கல்வியாண்டு **2024**

- திகதி 10.12.2022 (சனிக்கிழமை)
- நேரம் : காலை 7.30

மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலும் 5ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு

(C-5430)

077 017 5346

**பௌதிகவியல் (Physics)**

2023, 2024 உயர்தர மாணவர்களிற்கான பௌதிகவியல் தனியாகவும் (personal) குழுவாகவும் (Group) கற்பிக்கப்படும்.

- சகல அலகுகள்
- கடந்தகால வினாக்கள்

076 157 0107 (13650)

**வீடு/கட்டடம் தேவை**

யாழ் நகரம் அண்டிய பகுதிகளில் சமையல் தொழில் செய்வதற்கு சகல வசதிகளுடனும், விசாலமான வீடு/கட்டடம் நீண்டகால அடிப்படையில் உடனடியாகத் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு

076 709 3368 (C-5428)

**O/L DAY CLASS**

(மீட்டல் வகுப்புக்கள்)

ஆரம்பம் : 07.12.2022
புதன் காலை 8.00 மணி

- எமது Super Grade ஆசிரியர் குழாம்
- அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்** கல்வி நிலையம்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்

077 459 8440 (13695)


## மரண அறிவித்தல்

### திருமதி கேமலதா சிவரூபன்

(நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், நிதிக்கிளை, உயர்நீதிமன்றம் யாழ்ப்பாணம்)



யாழ்.பலாலியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கேமலதா சிவரூபன் அவர்கள் கடந்த 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் முத்துலிங்கம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் தங்கவேல் - கற்பகவதி தம்பதிகளின் அன்பு மருமகளும் தங்கவேல் சிவரூபனின் (பரீட்சைக் கிளை - யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு மனைவியும் சாருஜனின் (மாணவன் - தரம் 7, யாழ்.இந்துக் கல்லூரி) பாசமிகு தாயாரும் தங்கேஸ்வரன் (சுவிஸ்), சுமலதா (லண்டன்), பிறேமலதா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவநேசன் (யாழ். பல்கலைக்கழகம்), சிவதேவி (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.496/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 722 2600

(11587)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 150 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(13693)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.